**தலைப்பு 331 - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்**

-----------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியொகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் இணங்கியுள்ளது.

(ஆ) கடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக என்னால் செய்யப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**(அ) நிதிசெயலாற்றல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிச் செயலாற்றல் கூற்றில் திறைசேரி கட்டுநிதி மீதி ரூபா 78,714,274,286 ஆக இருந்ததுடன், திறைசேரி பரீட்சை மீதியின் பிரகாரம் அது ரூபா 78,714,283,000 ஆகும். | திறைசேரி கட்டுநிதி கணக்கில் கட்டுநிதி விடுவித்தல் மற்றும் திணைக்களத்தின் கட்டுநிதிப் பெறுவனவுகளுக்கிடையே ரூபா 8,714 வேறுபாடொன்று காணப்பட்டதுடன் அது திணைக்கள கட்டுநிதி கணக்கில் திறைசேரிக் கட்டுநிதி அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | அனைத்து சீராக்கங்களும் சரியாக இனங்காணப்பட்டு அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டியின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ii) | 2021 திசெம்பர் 31 இல் திறைசேரிக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்த ரூபா 116,134,657 ஆன தொகை நிதிச் செயலாற்றல் கூற்றில் திசெம்பர் 31 இல் கட்டுநிதி மீதியாகக் காட்டப்பட்டிருந்தது. | திருத்துவதற்காக குறித்துக் கொள்ளப்பட்டது | அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டியின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

**(ஆ) நிதி நிலைமை தொடர்பான கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கடந்த வருட நிதிக்கூற்றுக்களில் ACA-6 மாதிரிப் படிவத்தில் காட்டப்பட்டிருந்த திசெம்பர் 31 இல் உத்தியோகபூர்வ மனையின் பெறுமதி ரூபா 3,751,000 மற்றும் சுற்றுலா விடுதியின் பெறுமதி ரூபா 17,900,000 ஆனது 2021 சனவரி 01 இல் முன்கொண்டுவரப்பட்ட போது மனைகள் அல்லாத அலுவலக கட்டிடங்களின் பெறுமதியான ரூபா 319,764,000 ஆன மீதியுடன் சேர்க்கப்பட்டுக் காட்டப்பட்டிருந்தது. | 2002 மே மாத கணக்குப் பொழிப்புக்களின் மூலம் கணக்குக் குறிப்பு திருத்தப்பட்டு அறிக்கையிடப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை வகைப்படுத்தல் சரியாக செய்யப்பட்டு சரியாக அறிக்கையிடப்படல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 70,000 பெறுமதியான தொலைக்காட்சி இயந்திரம் மற்றும் ரூபா 930,000 பெறுமதியான கெமரா மற்றும் உதிரிப்பாகங்கள் போன்ற சொத்துக்கள் நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | 2509 செலவு விடயத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட இச் சொத்துக்கள் தவறு ஒன்றின் காரணமாக ஆரம்ப மீதியாக உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்களை வகைப்படுத்தல் சரியாக செய்யப்பட்டு சரியாக அறிக்கையிடப்படல் வேண்டும். |

**(இ) இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 5 வைப்புக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 2,841,119,289 என்பதுடன் அட்டவணையின் பிரகாரம் அது ரூபா 2,818,748,994 ஆக இருந்தமையால் ரூபா 22,370,295 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | கணக்காய்விற்காக மாவட்ட அலுவலகங்களின் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட முடியாதிருந்தமை, தலைமை அலுவலகத்தின் அட்டவணை மட்டுமே சமர்ப்பிக்கப்பட்ட காரணத்தினால் இவ் வேறுபாடு ஏற்பட்டுள்ளது. | சரியாக அறிக்கையிடப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பொது வைப்புக் கணக்கு இலக்கம் 6000-0-0-20-19 செலவுகள் மீளளிக்கப்படுவதற்கான நிதியப் பெறுவனவுகள் ரூபா 1,098,324 இற்கான உரிய அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வைப்புத் தொகுதியின் கீழ் மீதி மாவட்ட அலுவலகங்கள் சிலவற்றினால் அறிக்கையிடப்படுவதுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் அம் மாவட்டங்களுக்கான விரிவான தகவல்கள் தலைமை அலுவலகத்தில் இருக்கவில்லை. | குறிப்பிட்ட அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.6.3 பதிவேடுகள், மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் பராமரிக்கப்படாததுடன் சில பதிவேடுகள் முறையாக மற்றும் நாளதுவரையாக்கப்பட்டு பராமரிக்கப்படாமை மாதிரிக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இழப்புக்கள் மற்றும் நட்டங்க்ள பதிவேடு நிதிப்பிரமாணம் 110 மற்றும் 104 இன் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட வில்லை. | இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் பதிவேடு நாளதுவரையாக்கப் படுதலானது சரியாக மேற்கொள்ளப்படும். | நிதிப்பிரமாணம் 110 மற்றும் 104 பிரகாரம் இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் பதிவேடு நாளதுவரையாக்கப் படல் வேண்டும். |
| (ஆ) அரச உத்தியோகத்தர்களின் பிணை பதிவேடு அ.உ.பிணை அதிகாரச் சட்டம் 612(4) பிரிவின் பிரகாரம் பேணப்பட்டிருக்க வில்லை. | பிணைப் பதிவேடு பேணப்பட்டு வருவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் பிணை வைக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) நிதிப்பிரமாணம் 1647(உ) பிரகாரம் வாகனப் பட்டியல்படுத்தப்பட்ட பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | தகவல்கள் நாளதுவரையாக்கப் படுவதற்காக கடந்த காலங்களில் திணைக்களத்தால் வாகனத் திருத்தங்கள் மற்றும் நீக்கப்பட்டமை தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டுமென்பதால் அத்தகவல்கள் பெறப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட தகவல்கள் நாளதுவரையாக்கப்படும். | நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் பதிவேடு நாளதுவரையாக்கப் படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

------------------------

**2.1 செலவு முகாமைத்துவம்**

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 இன் 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 06 ஆம் பிரிவின் பிரகாரம் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கங்கள் ஒதுக்கப்படும் போது அவை முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டுமென்பது குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 331-2-2-1-1501 நலன்புரி செலவு விடயத்திற்காக 2021 யூலை 29 இல் பெறப்பட்ட குறைநிரப்புத் தொகை ரூபா 4,500,870,000 உம் ஆரம்ப மதிப்பீட்டுத் தொகையான ரூபா 53,000,000,000 உம் உள்ளடங்கலாக தேறிய கூட்டுத்தொகை ரூபா 57,500,870,000 இல் ரூபா 55,400,092,366 செலவிடப்பட்டதன் பின்னர் ரூபா 2,100,777,634 சேமிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் சமுர்த்தி நலன்கள் கொடுப்பனவிற்காக மதிப்பிடப்பட்டிருந்த ஒதுக்கங்கள் ரூபா 53 மில்லியன் ஆகும். அவ்வருடத்தில் முன்னுரிமைப் பட்டியலிலுள்ள பயனாளிகளை இலக்காகக் கொண்டு நிவாரண உதவிகளின் அளவினை அதிகப்படுத்தும் நோக்கத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அரசின் கொள்கை தீர்மானத்தின் காரணத்தினால் அது நடைமுறைப்படுத்தப்பட வில்லை. இசச்செலவு விடயத்தில் ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டதற்கு அது நேரடிக் காரணம் ஆகும். | மதிப்பீடு சரியாகத் தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020 இன் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 5(1) மற்றும் 5(2) பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் நி.பி 66 மற்றும் 69 இன் பிரகாரம் வீரமொங் நடைமுறை பின்பற்றப்பட்டு ஒதுக்கங்கள் பெறப்பட்டிருந்த போதும், வருட இறுதியில் அத்தொகை செலவிடப்படாத 5 சந்தர்ப்பங்களுக்கு உரிய ரூபா 7,824,698 ஆனது சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த காரணங்கள் கணக்காய்வின் போது ஏற்றுக் கொள்ளப் படவில்லை. | அவதானிப்புடன் முழுமையாக உடன்படுவதுடன் | மதிப்பீடு சரியாகத் தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 29 செலவு விடயங்களுக்கான கூட்டுத்தொகை ரூபா 5,950,096,700 ஆன தேறிய ஒதுக்கத்தில் வருடத்தின் செலவுகள் ரூபா 4,466,687,414 ஆக இருந்ததுடன் ரூபா 1,483,429,286 ஆனது பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது. | கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக அலுவலகம் மூடப்பட்டிருந்தும், செலவுக் கட்டுப்பாட்டிற்காக திறைசேரியால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் காரணமாக 2021 ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்டு திட்டமிடப்பட்டிருந்த பணிகள் எதிர்பார்க்கப்பட்டவாறு செயற்படுத்துவதற்கு முடியாது போனமையால் இந்த ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு சரியாகத் தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தால் 09 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட பல்வேறு சேவைகள் மற்றும் வழங்கல்களுக்கான செலுத்த வேண்டிய ரூபா 183,098 ஆன பெறுமதி பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்க | 2021 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பம் வரையிலும் கொடுப்பனவிற்கான உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாத | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கடப்பாடுகளுக்கு உடன்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வில்லை. மேலும் பல்வேறு சேவைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த 4 பொது வைப்புக்களுக்கான ரூபா 344,507 பொறுப்புக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | காரணத்தால் நிதிக்கூற்றுக்களில் இச்செலவுகள் பொறுப்புக்களாக குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. ஆனால் கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்த தரப்பினருக்கு கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டுமென்பதால் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்ததுடன் திணைக்களத்தின் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பொறுப்புக்கள் பதிவேடு மற்றும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பொறுப்புக்களுக்கு இடையே இரண்டு செலவு விடயங்களுக்கான ரூபா 320,619 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பம் வரையிலும் கொடுப்பனவிற்கான உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் இவ்வேறுபாடு வெளிப்பட்டது். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கடப்பாடுகளுக்கு உடன்படல் வேண்டும். |
| (இ) | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டிற்கான அனைத்து பொறுப்புக்களும் அடுத்து வரும் வருடத்திற்கு கொண்டு செல்லப்படாது அந்நிதியாண்டிலேயே செலுத்தப்பட்டு விடுவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், எவ்வித பொறுப்பொன்றும் அடுத்து வரும் வருடத்தில் தீர்க்கப்படும் நோக்கத்தில் முன்கொண்டு செல்லப்படக் கூடாத போதிலும், அந்த அறிவுறுத்தல்களுக்கு முரணாக ஏற்பட்ட பொறுப்புக்களைத் தீர்ப்பதற்காக திறைசேரி | 2021 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் கட்டுப்பாட்டை மீறி சமூக சூழ்நிலையில் மேற்கொள்வதற்கு ஏற்பட்ட சுவிஷேச செயற்திட்டத்தின் காரணமாக கட்டாயமாக நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளுக்காக கடப்பாடுகளுக்கு உடன்படுவதற்கு வேண்டியேற்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கடப்பாடுகளுக்கு உடன்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேற்கொண்ட நடவடிக்கைகளை எடுக்க மாட்டாதென அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும் 8 செலவு விடயங்களின் சேமிப்புக்களின் கூட்டுத்தொகையான ரூபா 99,432,128 ஐ விஞ்சியதாக ரூபா 182,849,545 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | | |

## 2.3 முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்தின் BD/AA/LR/01/2022 ஆம் இலக்க 2021 திசெம்பர் 31 ஆந் திகதிய கடிதம் மூலம் முற்பணக் கணக்கின் எல்லைகளைத் திருத்துவதற்காக நிதி அமைச்சருக்கு பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஏப்ரல் 08 கணக்காய்வுத் திகதி வரையில் அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | எல்லைகளை திருத்துவதற்காக செய்யப்பட்ட கோரிக்கையை அங்கீகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய வரவு செலவுத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர் அது தொடர்பாகத் தெரியப்படுத்தப்படுமென குறிப்பிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கடப்பாடுகளுக்கு உடன்படல் வேண்டும். |
| (ஆ) இடமாற்றங்கள், மரணித்தமை, வேலையிலிருந்து இடைநிறுத்தப்படல் மற்றும் சேவையிலிருந்து விலகிச் சென்ற 147 ஊழியர்களின் 2021 திசெம்பர் 31 இல் 01 வருடம் முதல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவைக் கடன் மீதி ரூபா 2,188,931 ஆகும். இக்கடன் மீதியில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதிகள் ரூபா 657,719 உட்பட 04 வருடங்கள் முதல் 05 இற்கு இடைப்பட்ட நிலுவை மீதி ரூபா 648,198 உம் 3-4 வருடங்களுக்கு இடைப்பட்ட | மரணித்த அதிகாரியின் இறப்பு பணிக்கொடை இன்னும் தயாரிக்கப்படாமையால் அறவிட முடியாதுள்ளது. சேவையிலிருந்து விலகிச் சென்ற அதிகாரிகள் அனைவரும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தை கொண்ட அதிகாரிகள் என்பதால் பிணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. அதனால் அவர்களது கடன் நிலுவைகளை அறவிடுவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. | கடன் தொகைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவைக் கடன் மீதி ரூபா 407,269 உம் 1-3 வருடங்களுக்கு இடைப்பட்ட நிலுவைக் கடன் மீதி ரூபா 307,780 உம் ஆகக் காணப்பட்டது. | வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட அதிகாரிகளின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் முடிவுறாதபடியால் அறவிடுவதற்கு முடியாதுள்ளது. | |
| (இ) | சேவையில் ஈடுபட்டுள்ள 11 அதிகாரிகளின் மீளாய்வாண்டில் அறவிடப்பட வேண்டிய இடர் மற்றும் வெள்ளக் கடன் மீதி ரூபா 672,348 ஐ அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட திணைக்களத்தின் ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் சம்பளம் வழங்கப்படாத அனைத்து ஊழியர்களினதும் இடர்க் கடன் முற்பண பீ கணக்கின் கீழ் தீர்க்கப்படும். | கடன் தொகைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | சமுர்த்தி அதிகாரசபை காணப்பட்ட காலத்தில் அதிகாரிகளுக்கு கடன் வழங்கப்பட்ட ஊழியர் கடன் சுழலும் நிதியம் தொடர்ந்தும் பேணப்பட்டு வருவது தொடர்பாக திறைசேரியின் அறிவுறுத்தலைப் பெற்றுக் கொள்ளாது அரச உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் விடுவித்தலின் கீழ் 2020 ஆம் ஆண்டில் 302 அதிகாரிகளுக்கு ரூபா 66,257,360 இடர்க்கடன் வழங்கப்பட்டிருந்தது. இம்முறைமையில் ஊழியர் கடன் சுழலும் நிதியத்தில் தொடர்ந்தும் வழங்கப்பட்டிருந்தாலும் அதற்காக 2014 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை 8 வருடங்களுக்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. 2021 ஆம் ஆண்டு வரை சுழலும் நிதியத்தின் மூலம் கடன் கொடுப்பனவுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் ஊழியர் கடன் சுழலும் நிதியத்தின் 2022 ஆம் | ஊழியர் கடன் சுழலும் நிதியத்தின் கணக்குகள் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதுடன் விரைவில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் தொகைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் மார்ச் மாத வங்கிக் கூற்றின் பிரகாரம் ரூபா 94,216,546 ஆன சாதகமான மீதியொன்று நடைமுறைக் கணக்கில் காணப்பட்டது. | | |
| (உ) | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு மட்டும் வழங்கப்படுகின்ற வங்கி நிதி பிரிவின் விசேட ஊழியர் கடன் மற்றும் சமுரத்தி வங்கிகளால் வழங்கப்படுகின்ற சமுர்த்தி வங்கி விசேட கடன், வழங்கப்படும் போது வேறு சேவைகளிலிருந்து திணைக்களத்திற்கு இடமாற்றலாகி வந்த அதிகாரிகளுக்கு 4 சந்தர்ப்பங்களில் ரூபா 2,850,836 ஆக கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் அக்கடன் தொகை திணைக்களத்தில் சேவையிலிருந்து விட்டுச் செல்லும் சந்தர்ப்பங்களில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் அதிகாரிகள் அல்லாதோருக்கு கடன் வழங்குதல் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதுடன் திணைக்களத்திலிருந்து இடமாற்றலாகிச் சென்ற அதிகாரிகளின் கடன் மீதிகள் அவர்களின் மாதாந்தச் சம்பளத்தில் முறையான வகையில் கழிவுக்குட்படுத்தப் படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் | | | | |
| (i) நி.பி 135 மற்றும் 381(i) | - | பயிற்சி நிலையங்களின் சகல பணிகளும் நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படாது இணைக்கப்பட்டுள்ள பதவியணியினரால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், 03 | 03 பயிற்சி நிலையங்களில் நடைமுறைக் கணக்குகள் பேணப்படுதல் தொடர்பாக அரச நிதித் திணைக்களத்தினால் விசாரிக்கப்பட்ட போது இற்றைவரை | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றிக்கை பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | பயிற்சி நிலையங்கள் திறைசேரியின் அங்கீகாரமின்றி வங்கி நடைமுறைக் கணக்குகளைப் பேணி வருகின்றன. | பேணப்பட்டு வருகின்ற கணக்குகள் அம்முறையிலேயே பேணப்பட்டு வருமாறும், அக்கணக்குகளின் நடவடிக்கைகளை பராமரித்து வருகின்ற அதிகாரியின் தகவல்களை வழங்குமாறும் வாய் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. | |
| (ii) | நி.பி 189 மற்றும் 486 | 2,887,765 | 2021 திசெம்பர் மாத வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் 11 மாதங்கள் முதல் 04 வருடங்கள் வரையான காலப்பகுதிக்குள் வைப்புச் செய்யப்பட்டும் வசூலிக்கப்படாத 22 காசோலைகளுக்காக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் தேவையான திருத்தங்கள் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iii) | நி.பி 396 | 164,300 | 2021 திசெம்பர் 31 இல் வழங்கப்பட்டு 6 மாதங்களுக்கும் மேற்பட்ட 12 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் தேவையான திருத்தங்கள் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iv) | நி.பி 756, 757 மற்றும் 1647(ஆ) | - | 146 வாகனங்கள் தொடர்பாக பௌதீகப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப் படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | வாகனக் கணிப்பீட்டு நடவடிக்கைகள் மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந் த துடன் தலைமை அலுவலகத்தின் வாகனக் கணிப்பீட்டு நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | - | அறிவுறுத்தலின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக திணைக்களத்தின் அமைப்பு வரைபடம் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக் க வில்லை. | திணைக்களத்தின் உத்தேச பதவியணி உள்ளடங்கலாக அமைப்பு வரைபடம் தயாரிக்கப்பட்டு 2020 ஒக்தோபர் மாதத்தில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | - | மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்படாததுடன் , ஒட்டுமொத்த பதவியணிக்கான பதவியணி ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | அவதானிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பதவியணி ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. இது தொடர்பாக தேடிப் பார்த்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2020 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தி | - | நிதியங்களாக நிறுவப்பட்டிருந்த திவிநெகும நிதியம், சமூகப் பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், வீடமைப்பு அபிவிருத்தி சீட்டிழுப்பு நிதியம், வங்கிச் சங்க எழுதுகருவிகள் சுழலும் நிதியம் மற்றும் ஊழியர் கடன் சுழலும் நிதியம் என்பன பேணப்பட்டு வருவதற்கான தேவைப்பாட்டை கருத்திற் கொண்டு அவற்றை சட்டரீதியாக்குவதற்கா ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதியங்கள் தொடர்பாக திணைக்களம் உருவாக்கல் சட்டத்தின் பிரகாரம் சட்டரீதியான நிதியங்களாக நியமிக்கப்பட்டுள்ளன. இந்நிதியங்கள் பேணப்பட்டு வருவதற்குத் தேவையான சட்டப் பிரமாணக் கோவை தயாரிக்கப்பட்டு சட்டவரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | நிதி அமைச்சின் 2020 ஒக்தோபர் 02 ஆந் திகதிய 05/2020 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 13.2 பந்தி வழிகாட்டில் இல 3. | | ஓட்டமுடியாத நிலையில் காணப்படுகின்ற வாகனங்களை அகற்றுதல் அல்லது திருத்தங்கள் செய்யப்பட்டு பயன்படுத்தல் தொடர்பாக மற்றும் | தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரைகளை கருத்திற் கொண்டு செயற்திறன் தொடர்பாக பெறப்படுகின்ற பரிந்துரைகளின் பிரகாரம் | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வழிகாட்டியின் ஏற்பாடுகளின் பிரகாரம் அகற்றப்படும் செயன்முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத 29 வாகனங்கள் உள்ளன. | அவ்வாகனங்கள் திருத்தப்படுவதற்கான அல்லது அகற்றப்படுவதற்கான மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

### 2.5 வங்கிக் கணக்குச் செயற்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திசெம்பர் மாத வங்கி இணக்கக் கூற்றில் இனங்காணப்படாத வைப்புக்கள் ரூபா 25,971,852 மற்றும் வசூலிக்கப்படாத வைப்புக்கள் ரூபா 85,131,426 உள்ளடங்கிக் காணப்பட்டதுடன் 2022 பெப்ரவரி மாதம் வரையில் ரூபா 4,477,765 ஆன மீதியொன்று 2 மாதங்கள் தொடக்கம் 4 வருடங்கள் காலம் கடந்திருந்த போதிலும் வசூலிக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகள் இனங்காணப்பட்டுள்ள துடன் அவை விரைவில் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 2.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டியக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சமுர்த்தி பயனாளிகளுக்கு செலுத்தப்பட்டு வருகின்ற மானியத் தொகையிலிருந்து சில பங்களிப்புக்களைப் பெற்று பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக உருவாக்கப்பட்ட நிதியம் மற்றும் கட்டாய சேமிப்பாக வைப்பிலிடப்படுகின்ற நிறுத்தி வைக்கப்பட்ட சமுர்த்தி வங்கிகளுக்கான நிதியம் பொதுத் திறைசேரியின் உடன்பாட்டின் அடிப்படையில் 2004 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு | அவதானிப்பில் குறிப்பிடப்பட்ட தொகையை இத்திணைக்களத்திற்கு மீளளிக்குமாறு தொடர்ந்தும் திறைசேரியிடம் கோரிக்கைகள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் இன்னும் மீளளிக்கப்படவில்லை. திறைசேரியினால் குறிப்பிட்ட தொகை மீளளிக்கப்பட்டதன் பின்னர் சுழலும் நிதிப் பிரிவிற்கு தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய தொகை மீளளிக்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வரையில் 06 சந்தர்ப்பங்களில் கூட்டுத்தொகை ரூபா 47,653,794,136 அரசின் பல்வேறு நடவடிக்கைகளுக்காக பெறப்பட்டிருந்ததுடன் இற்றை வரையில் அத்தொகை உரிய சமுர்தி வங்கி மற்றும் நிதியத்திற்கு மீண்டும் செலுத்தப்பட்டிருக்க வில்லை.

## 2.7 வைப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பயிற்சி நிலையங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் அரசின் வருமானத்திற்கு செலவு வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது அதன் மூலம் செலவுகள் செய்யப்பட்டதன் பின்னர், மிகுதித் தொகையான ரூபா 2,380,951 ஆனது பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்படுவற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பயிற்சி நிலையங்களின் நிர்வாகச் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை இவ்வாறு வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. பயிற்சி நிலையங்களின் பராமரிப்புச் செலவு அரசிற்கு பாரமாக இருப்பதை தடுக்கும் நோக்கில் பயிற்சி வேலைத்திட்டங்களின் மூலம் உருவாக்கப்படுகின்ற நிர்வாகச் செலவுகள் ஈடு செய்யப்படுவதுடன் இரு வருடங்களுக்கு தேக்கி வைக்கப்பட்டுப் பின்னர் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | சேகரிக்கப்படுகின்ற வருமானம் அரச வருமானத்தில் செலவு வைக்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சுழலும் நிதி வங்கிப் பிரிவின் மூலம் 2020/2021 ஆம் வருடங்களில் கொவிட் நிவாரணங்களை வழங்குவதற்காக மாவட்ட சமுர்த்தி அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த தொகையில் மிகுதி மீண்டும் அனுப்பப்பட்டு ரூபா 231,162,935 ஆனது அப்பிரிவிற்கு தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. | கொவிட் நிவாரணங்களை வழங்குவதற்காக பல மூலங்களிளிருந்து 2020 மற்றும் 2021 ஆம் வருடங்களில் நிதி உதவிகள் வழங்கப்பட்டிருந்தது. மிகுதித் தொகை மீண்டும் அனுப்பப்படும் போது அது நிதி மூலங்களின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்டு கணக்கு வைக்கப்படுதல் இலகுவான காரியமல்ல. ஆகையால் அனைத்துப் பெறுவனவுகளும் வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. | மிகுதித் தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இற்றைவரை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் விரிவான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு வருவதுடன் அவ்வறிக்கை பெறப்பட்டதன் பின்னர் உரிய விதத்தில் இம்மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | 2019 மே மாதத்திலிருந்து 2021 யூன் வரையிலான காலப்பகுதியில் வழங்கப்பட்டும் ஆனால் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத மொத்தம் ரூபா 1,374,632 ஆன காலாவதியாகிய 105 காசோலைகள் நிதிப்பிரமாணம் 396(அ) பிரகாரம் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. | தீர்க்கப்பட வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டு தீர்ப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதற்காக வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் இம்மீதிகள் இனங்காணப்பட்டு தீர்க்கப்படுவத்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 தொடக்கம் 2021 ஒக்தோபர் 27 வரையான காலப்பகுதியில் 212 சந்தர்ப்பங்களில் திணைக்கள உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 112,334,568 ஆன நிதி மூலங்கள் இனங்காண்பதற்கு முடியாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கொவிட் நிவாரணங்களை வழங்குவதற்காக பல மூலங்களிலிருந்து 2020 மற்றும் 2021 ஆம் வருடங்களில் நிதி வழங்கப்பட்டிருந்தது. மிகுதித் தொகை மீண்டும் அனுப்பப்படும்போது அது சமுர்த்தி வங்கியினால் உத்தியோகபூர்வ கணக்கிற்கு அனுப்பப்பட்டிருந்த தொகை இவ்வாறு வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. இற்றைவரையில் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் விரிவான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு வருவதுடன் அவ்வறிக்கை பெறப்பட்டதன் பின்னர் பணம் செலவு வைக்கப்பட்டு சமுர்த்தி வங்கி உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி மூலங்கள் இனங்காணப்பட்டு தீர்ப்பனவு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | அம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகத்திற்கு பல்வேறு பணிகளுக்காக வழங்கப்பட்டிருந்த தொகையில் சேமிக்கப்பட்டு மீண்டும் அனுப்பப்பட்டிருந்த ரூபா 452,688 அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | அம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகத்திற்கு இந்த அவதானிப்பு தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக கண்டுபிடித்து வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது | அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | இரண்டாம் தரப்பினருக்கு செலுத்தவதற்காக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வைப்புக் கணக்கில் திசெம்பர் 31 இல் ரூபா 2,798,770,935 ஆன மீதியில் 8 வருடங்கள் தொடக்கம் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் பழைமை வாய்ந்த ரூபா 2,374,500,000 வைப்பு மீதியொன்று காணப்பட்டது. | முன்னாள் சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தினால் திறைசேரியின் இணக்கத்தின் அடிப்படையில் சமுர்த்தி நிவாரண உதவிகளைச் செலுத்துவதற்காக சமுர்த்தி அதிகார சபையால் ரூபா 3,457.5 மில்லியன் தொகையொன்று பெறப்பட்டிருந்தது. அதிகாரசபை மற்றும் திணைக்களம் ஒன்றிணைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட கடன் தொகையில் இன்னும் தீர்க்கப்பட வேண்டிய மீதி 6000-0-0-13-0-123 வைப்புத் தொகுதியின் கீழ் கணக்கிலிடப்பட்டிருந்த காரணத்தினால் இம்மீதி குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதி மூலங்கள் இனங்காணப்பட்டு தீர்ப்பனவு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 தூர நோக்கும் செயற்பணியும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வறுமையை ஒழிக்கும் அடிப்படை நோக்கத்துடன் குடும்ப அலகு அடிப்படையிலான அபிவிருத்தி செயற்திட்டங்களை பயன்படுத்துவதன் மூலம் வருமானம் மற்றும் சமூக நிலைமைகளை அதிகரிப்பதன் மூலம் வறுமையை ஒழிப்பதற்கும் இளைஞர் யுவதிகளை நாட்டின் | | |

அபிவிருத்தி செயன்முறை மற்றும் நிர்வாகத்திற்கு நேரடியாக பங்களிப்புச் செய்வதற்கும் சமுர்த்தி பிரச்சாரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2022 ஏப்ரல் மாதம் வரையில் மொத்த சமுர்த்திப் பயனாளிகளின் எண்ணிக்கை 1,760,865 ஆக இருந்ததுடன் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2021 வருடம் வரை 09 வருட காலப்பகுதியில் ரூபா 337,645 மில்லியன் சமுர்த்தி நிவாரண உதவிகளுக்காகச் செலவிடப்பட்டிருந்தது. நீண்ட காலமாக செயற்படுத்தப்பட்டு வருகின்ற சமுர்த்தி செயற்திட்டங்களின் ஊடாக இதுவரையில் பொருளாதார மற்றும் சமூக உயர்ந்த வாழ்க்கைத் தரமொன்றை சுயமாக முன்னேறக்கூடிய அதிகாரம் பெற்ற குடும்பங்களை இனங்காண்பது முறையாக மேற்கொள்ளப்பட்டிராமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| (அ) 1994 தொடக்கம் 2011 வரை 13 வருடங்களுக்கான தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் சமுர்த்தி நலன்களுக்கு உரித்துடைய சமுர்த்தியாளர்களின் எண்ணிக்கை 593,169 பேர், 2022 ஆம் வருடம் வரை 10 முதல் 27 வருடங்கள் வரையான காலமாக நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். | சமுர்த்தி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரைக்கும் அதிகாரத்திற்கு வந்த அரசினால் குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களின் செயலாற்றலை உயர்த்துவதற்கு மேலதிகமாக அவர்களது சமூக, பொருளாதார, கல்வி மற்றும் ஆன்மீக வலுவூட்டல் மூலம் உதவித் தொகை செயற்திட்டத்திலிருந்து நீக்குவதற்காக காலததிற்குக்காலம் கொள்கைத் தீர்மானங்களை எடுத்திருந்தது. எனினும், காணப்படுகின்ற அரசாங்கம் காலத்திற்கு காலம் மாற்றமடைகின்ற காரணத்தினால் அத்தீர்மானங்கள் நிறைவேற்றப்படவில்லை. எனவே மிகவும் | அடிப்படை நோக்கத்தின் பிரகாரம் செய்யப்பட வேண்டிய பணிகள் மற்றும் செயற்பாடுகளுக் கான செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நீண்டகாலத்திற்கு முன்பிருந்தே நிவாரண உதவிகள் வழங்கப்படுகின்ற பெருமளவு எண்ணிக்கையான குடும்பங்களைக் காணக்கூடியதாக உள்ளது. | |
| (ஆ) | 1994 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி செயற்திட்டத்தில் உயர்ந்த வருமான மட்டத்தை அடைந்துள்ள பயனாளிகளை நீக்குவதற்காக காலரீதியாக அவர்களது வருமான மட்டத்தை பின் தொடர்வதற்கான எவ்வித நடவடிக்கையொன்றும் இருக்கவில்லை. | 2017 ஆம் ஆண்டில் தீவு முழுவதும் உள்ளடங்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட குடும்பங்களை இனங்காணும் கணிப்பீட்டின் மூலம் பெற்றுக் கொண்ட விளைவுகளின் அடிப்படையில் வருமான மட்டம் உயர்வடைந்துள்ள பயனாளிகளின் குடும்பங்களை நீக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் அது நிறைவேற்றப்பட்டபோது பொதுமக்களின் எதிர்ப்புக் காரணமாக ஏற்பட்ட நிலைமையின் அடிப்படையில் அக்கணிப்பீடு முடிவுகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்தலானது அரசினால் கைவிடப்படுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | வருமான மட்டத்தை பின் தொடர்வதற்கான செயல்முறை யொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். |

### 3.1.2 கொவிட்-19 தொற்றுநோய் சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ரூபா 5,000 கொடுப்பனவு செய்தல்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்குப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இரண்டு கட்டங்களில் 4,542,865 ஆன பயனாளிகளுக்கு ரூபா 5,000 கொடுப்பனவைச் செலுத்துவதற்காக | | |

| | | |
|---|---|---|
| மொத்தம் ரூபா 22,302.85 மில்லியன் செலவிடப்பட்டமை தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) கணக்குப் பிரிவிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மேற்குறிப்பிடப்பட்ட உதவித் தொகைகளை வழங்குவதற்குத் தேவையான பணததைப் பெற்றுக்கொள்வது சமுர்த்தி சுழலும் நிதி வங்கி நிதியம், சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி சீட்டிழுப்பு நிதியம் மற்றும் சமுர்த்தி நிதியம் போன்ற நிதியங்களுக்கு உரித்தான மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கியில் காணப்பட்ட பெறுமதி ரூபா 11,352,242,292 ஆன 91 நிலையான வைப்புக்கள் பிணையாக வைக்கப்பட்டு ரூபா 14 மில்லியன் கடன் பெறப்பட்டிருந்தது. கடனைத் தீர்ப்பதற்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 7,164,971,000 வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேலும் செலுத்த வேண்டிய கடன் தொகை ரூபா 6,835,029,000 என்பதுடன் இதில் அறவிடப்படுகின்ற வட்டி பெறுமதி கடன் தொகை முற்றாக செலுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் கணக்கிடப்படுவதற்கு உடன்பட்டிருந்தது. | இத்தொகையை மீளளிப்பதற்காக தொடர்ந்தும் திறைசேரிக்கு கோரிக்கைகள் விடுப்பதுடன் மாதாந்த கட்டு நிதி விண்ணப்ப படிவத்திலும் இக்கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் குறிப்பிட்ட தொகை தீர்ப்பனவு செய்யப்படுவதற்கு இதுவரையில் ஒதுக்கங்கள் அல்லது கட்டுநிதி வழங்கப்படவில்லை. | நிதியங்களுக்கு நட்டமேற்படாத முறையில் கடன் தொகையை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) கடன் வழங்கப்படும் போது கொடுப்பனவுக் காலம் 6 மாதங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் மீண்டும் 3 மாதங்கள் நீடிக்கப்பட்டிருந்தும் கடனைச் செலுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படாது 2022 ஒக்தோபர் வரை மீண்டும் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. | திறைசேரியினால் கடன் தொகையை தீர்ப்பதற்காக வழங்கப்பட்டிருந்த காலப்பகுதிக்குள் அக்கடனைத் தீர்ப்பதற்கான ஒதுக்கங்கள் மற்றும் கட்டுநிதி வழங்கப்படாமையால் கடன் தீர்ப்பதில் சட்டரீதியான முறையைப் பேணுவதற்காக இவ்வாறு காலம் நீடிக்கப்பட்டிருந்தது. | நிதியங்களுக்கு நட்டமேற்படாத முறையில் கடன் தொகையை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.1.3 சிற்றுண்டிச்சாலை நிர்மாணித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் புதிய 9 சிற்றுண்டிச்சாலைகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 51,333,146 ஆன ஒதுக்கங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றுள் ரூபா 49,154,249 செலவிடப்பட்டு 9 சிற்றுண்டிச்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. 2021 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சிற்றுண்டிச்சாலை 2022 மார்ச் மாதம் வரையில் திறக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது தீவில் ஏற்பட்டுள்ள எரிபொருள் மற்றும் எரிவாயு நெருக்கடி அத்துடன் உள்ளூர் சுற்றுலா கைத்தொழில் செயலற்ற தன்மை காரணமாக தற்போது வணிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற சமுர்த்தி சிற்றுண்டிச்சாலைகள் பல தடைகளுக்கு மத்தியில் பராமரிக்கப்பட்டு வருவதுடன், வணிக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள சிற்றுண்டிச்சாலைகளைத் திறப்பதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை முறையாக செயற்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 5 பிரதேச செயலகங்களில் சிற்றுண்டிச்சாலை நிர்மாணிப்பதற்காக ரூபா 33,269,239 வழங்கப்பட்டிருந்த போதிலும் அவற்றின் பணிகள் முடிக்கப்பட்டு திறந்து வைப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது தீவில் ஏற்பட்டுள்ள எரிபொருள் மற்றும் எரிவாயு நெருக்கடி அத்துடன் உள்ளூர் சுற்றுலா கைத்தொழில் செயலற்ற தன்மை காரணமாக தற்போது வணிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற சமுர்த்தி சிற்றுண்டிச்சாலைகள் பல தடைகளுக்கு மத்தியில் பராமரிக்கப்பட்டு வருவதுடன், வணிக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள சிற்றுண்டிச்சாலைகளைத் திறப்பதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை முறையாக செயற்படுத்தப்படல் வேண்டும். |

### 3.1.4 பயனாளிகள் முகாமைத்துவ மொடியூல் (CRM) செயற்படுத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சமுர்த்திப் பயனாளிகளுக்கு ரூபா 1.76 மில்லியனுக்கான நிவாரண உதவிகள் செலுத்தப்படுகின்ற செயற்திட்டத்தை செயற்படுத்தல், முகாமைத்துவ மொடியூல் (CRM) மூலம் செயற்படுவது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) 2021 சனவரி மாதத்திலிருந்து மொடியூல் மூலம் அறிக்கைகள் பெறப்படாது மாவட்டச் செயலகங்களினால் அனுப்பப்படுகின்ற அதிகபட்ச அறிக்கைகளை கருத்திற் கொண்டு நிவாரண உதவிகளுக்கான ஒதுக்கங்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2 மாவட்டங்களில் இரண்டு மாதங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் மொடியூல் மற்றும் அதிகபட்ச அறிக்கை என்பவற்றுக்கிடையே 924 பயனாளிகள் வேறுபாடொன்று காணப்பட்டது. | பயனாளிகள் முகாமைத்துவ தரவுகள் உள்ளடக்கப்பட்ட போது ஏற்பட்ட தொழில்நுட்ப மற்றும் வேறு நடைமுறைச் சிக்கல் காரணமாக திட்டமிடப்பட்டவாறு குறிப்பிட்ட பணிகள் குறித்த காலப்பகுதியினுள் ஆரம்பிக்கப்படுவதற்கு முடியாதிருந்தது. | பயனாளிகள் முகாமைத்துவ மொடியூல் (CRM) நாளதுவரையாக்கப் பட்டு பேணப்படல் வேண்டும். |
| (ஆ) 2022 மார்ச் 16 கணக்காய்வுத் திகதி மொடியூல் மூலம் பெறப்பட்ட நாளதுவரையாக்கப்பட்ட சமுர்த்தி பயளாளிகளின் எண்ணிக்கை 1,765,819 ஆக இருந்ததுடன் அத்தினத்தில் நிதிப் பிரிவிடம் பெறப்பட்ட அறிக்கையின் பிரகாரம் சமுர்த்திப் பயனாளிகளின் 2409 ஆன தேறிய வேறுபாடொன்று இரு அறிக்கைகளுக்குமிடையில் அவதானிக்கப்பட்டது. இம்முறைமையின் மூலம் | CRM கணனி வேலைத் திட்டத்தின் மூலம் உதவி நிவாரண உதவித் தொகை திருத்தங்கள் நாளதுவரையாக்கப் படுவதற்கு உரிய அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டிருப்பதுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் போது (திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் போது) ஏற்பட்ட தொழில்நுட்ப மற்றும் | பயனாளிகள் முகாமைத்துவ மொடியூல் (CRM) நாளதுவரையாக்கப் பட்டு பேணப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிவாரண உதவி பெயர் பதிவேடு வேறுபாட்டிற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த நீக்கங்கள், புதிய சேர்த்தல்கள், அல்லது பெறுமதி திருத்தங்கள், வசிப்பிட பெயர் மாற்றங்கள் தினமும் நாளதுவரையாக்கப்பட வேண்டியுள்ளதுடன் அனைத்து மாதத்தினதும் முதலாம் கடமைத் திகதியில் நிவாரண உதவித்தொகை வங்கிக்கு வழங்குதல் தொடர்பான அறிக்கை மொடியூல் மூலம் வழங்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நாளதுவரையாக்கப்படல் மேற்கொள்ளப்படவில்லை என்பது 2020 மற்றும் 2021 ஆம் வருடங்களில் மேலதிக தொகை முறையே ரூபா 37,579,986 மற்றும் ரூபா 680,738,364 மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வெறு நடைமுறைச் சிக்கல்கள் இதற்கு தாக்கமளித்துள்ளது. | |
| (இ) | அனைவருக்கும் மின்சாரம் வழங்குதல் செயற்திட்டத்திற்கான தரவுகள் முகாமைத்துவம் இம்மொடியூல் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் மொடியூலில் DashBoard பிரகாரம் மற்றும் Count அறிக்கையின் பிரகாரம் பெறப்பட்ட தரவுகளில் இணங்காமை அவதானிக்கப்பட்டது. மேலும் மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட்டிருந்த வீடுகளின் எண்ணிக்கை 33,202 ஆகவும் மொடியூல் மூலம் பெறப்பட்ட தரவுகளின் பிரகாரம் இது 12,658 ஆக காட்டப்பட்டிருந்தது. | பல சந்தர்ப்பங்களில் CRM மொடியூல் நாளதுவரையாக்கப் படுவதற்காக உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. | பயனாளிகள் முகாமைத்துவ மொடியூல் (CRM) நாளதுவரையாக்கப் பட்டு பேணப்படல் வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்தினால் செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டம் தொடர்பான தகவல்கள் CRM மொடியூல் மூலம் மேற்கொள்ளப்பட்டு | அனைத்து மாவட்டங்களுக்கும் இதுவரையில் 2022 மே 18 இற்கு முந்திய செயற்திட்டங்களை | பயனாளிகள் முகாமைத்துவ மொடியூல் (CRM) நாளதுவரையாக்கப் பட்டு பேணப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | வருவதுடன் 02 மாவட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதியை அங்கீகரித்தல், மேற்கொண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல், முடித்தல் தொடர்பான தகவல்கள் மொடியூலில் உள்ளடக்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | தரவுகளை நாளதுவரையாக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இம்மாதம் முடிவடையும் போது தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள செயற்திட்டங்களின் தரவுகள் நாளதுவரையாக்கப்பட்டு முடிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (உ) | Covid-19 நிவாரண உதவிகளை வழங்குவது தொடர்பான தகவல்கள் CRM மொடியூலுக்கு உள்ளடக்கப்பட வேண்டுமென சுற்றறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அது முறையாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து மாவட்டங்களுக்கும் தரவுகளை நாளதுவரையாக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. | பயனாளிகள் முகாமைத்துவ மொடியூல் (CRM) நாளதுவரையாக்கப் பட்டு பேணப்படல் வேண்டும். |

### 3.1.5 திவிநெகும சமூக அடிப்படையிலான வங்கி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும சட்டத்தின் 26 ஆம் பந்தியின் பிரகாரம் திவிநெகும சமூக அடிப்படையிலான வங்கிகளின் நோக்கமாக திவிநெகும பயனாளிகளின் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவித்தல், முதலீட்டுத் திறனை மேம்படுத்தல், மற்றும் பயனாளிகளுக்கு கடன் வசதிகளை வழங்குதல் குறிப்பிடப்பட்டுள்ளது. சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சமூகங்களில் 2014-2018 காலப்பகுதியில் ஏற்பட்ட 135 மோசடிகளுக்கான ரூபா 115,723,619 தொடர்பாக 2018 மற்றும் 2019 கணக்காய்வாளர் | சமுர்த்தி வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களில் இடம்பெற்ற நிதி மோசடிக்கான பிரதான காரணம் அந்த வங்கிகளின் உரிய அதிகாரிகள் சாதாரண முறையில் கணக்குப் பணிகளைச் செய்து வந்தமையே என நாம் அடையாளம் கண்டோம். (கைமுறை) எனவே அனைத்து சமுர்த்தி வங்கிகள் மற்றும் சங்கங்கள் தற்போது கணனி செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. | செய்ய வேண்டிய பணிகள் மற்றும் செயற்பாடு களுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது சரியான உள்ளகக் கட்டுப்பாடொன்று உருவாகுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| தலைமை அதிபதியின் அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன் அறிக்கையில் காட்டப்பட்டுள் நிதி மோசடி மற்றும் முறைகேடுகள் கணிசமான அளவு அதிகரித்துள்ள போதிலும் இது தொடர்பாக மேல்மட்ட நிர்வாகத்தினரால் கவனம் செலுத்தப்பட்டு அவற்றைத் தடுப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. வங்கிப் பணம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதன் காரணமாக திவிநெகும பயனாளிகளின் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய பணத்தை அந்நோக்கத்திற்காக பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. இணைக்கப்பட்டுள்ள பதவியணியால் மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடிகள் மற்றும் முறைகேடு அறிக்கைகள் குறிப்பிடத்தக்க பெறுமதியைக் கொண்டுள்ளமையால் திவிநெகும சட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அவர்கள் செய்ய வேண்டிய கடமைகள் முறையாக நிறைவேற்றப்பட்டதா என கணக்காய்வின் போது கேள்வி எழுப்பப்பட்டது. | அப்பணியின் மூலம் வாடிக்கையாளரின் பணியை மேலும் திறம்படச் செய்வதோடு வேண்டுமென்றே கைமுறையாகச் செய்யப்படும் தவறுகள் மற்றும் நிதி மோசடிகளைக் குறைப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். | |

## 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சமுர்த்தி எப்எம் இணையதள வானொலிக்காக ஒலிபரப்பு நிலையத்தின் உபகரணங்கள் மற்றும் கட்டுப்பாட்டு மேடையின் செலவினத்திற்காக ரூபா 1,127,000 தொகையும், உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் தேவையான தொழில்நுட்ப | சமுர்த்தி FM வானொலி ஆரம்பிக்கப்பட்ட முதலாவது வருடத்தில் அந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு முடியுமாக இருந்தது. இணையதள வானொலியாக மென்பொருளொன்றை கையடக்கத் தொலைபேசி ஊடாக வழங்கி இந்த | அடிப்படை நோக்கம் மற்றும் இலக்குகளை மிகவும் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் மக்களுக்கிடையே சென்றடைவதற்கு பொருத்தமான வேலைத்திட்ட மொன்று |

உதவிகளுக்காக ரூபா 1,200,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்ததுடன் தற்போது உடன்படிக்கை செய்யப்பட்ட காலம் முடிவடைந்தமையால் அந்த நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தாமல் நிறுத்தப்பட்டிருந்தது.

சமுர்த்தி FM இணையதள வானொலியை ஏற்படுத்தும் அடிப்படை நோக்கமாக வறுமையை குறைக்கும் அபிவிருத்தி பணிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் சனத்தொகை பகுதியினருக்கு உற்சாகமளிக்கின்ற தொடர்பாடல்களை கட்டியெழுப்புவதன் மூலம் சமுர்த்தி முயற்சியினை விரிவான கலந்துரையாடலுக்கு உட்படுத்தி அதன் மூலம் இலக்கினை மிகவும் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் மக்களுக்கிடையே தொடர்பினை ஏற்படுத்துவதாக இருந்த போதிலும் அவ்வாறு ஏற்படுத்துவதற்கு இணையத்தள வசதிகள் காணப்படாமை, ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி இன்மை மற்றும் ஏனைய ஆகக்குறைந்த வசதிகள் காணப்படாமை, சமுர்த்தி நலனாளிகள், குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு இந்த FM இணையத்தள வானொலி சேவையினை ஆக்கபூர்வமானதாகவும் செயற்திறனானதாகவும் சேவையினை பெற்றுக் கொள்ளும் இயலுமை காணப்பட்டதா என்பது கேள்விக்குரியதாக இருந்தது. நோக்கத்தை அடைந்து கொள்வதற்கான இயலுமையை பரீட்சித்தபோது இலங்கையில் ஒரு நபரின் கையடக்கத் தொலைபேசி பாவனை 140 சதவீதமான ஆகக்கூடிய பெறுமதியை கொண்டிருந்தது. எனினும், இவ்வாறான தொழில்நுட்ப விடயங்கங்களின் நோக்கில் ஒரு வருடத்தில் 100 சதவீதத்தை அடைந்து கொள்வது முடியாதிருந்தமையால் இந்த நோக்கத்தை அடைந்தமையை தீர்மானிப்பதற்கு அதனை விட கூடிய காலம் தேவைப்படுகின்றது என அறியத்தருகின்றோம். தயாரிக்கப்படல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| (ஆ) 2020 ஆம் ஆண்டின் போது ''e'' பத்திரிகை வெளியீட்டிற்காக 03 வருட காலத்திற்காக பெற்றுக் கொள்ளும் அடிப்படையின் மென்பொருளை கொள்வனவு செய்தல் ''e'' செய்திப் பத்திரிகை வெளியிடல் மற்றும் முதல் பக்கம் தயாரிப்பதற்காக ரூபா 9,403,900 செலுத்துவதற்கு தனியார் கம்பனியொன்று இணங்கியிருந்தது. 2022 ஏப்ரல் மாதம் வரையிலும் உரிய தனியார் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ''e'' செய்திப் பத்திரிகை தரவிறக்கம் செய்யப்பட்ட எண்ணிக்கை 15,279 அதாவது மொத்த சமுர்த்தி நலனாளிகளில் 0.86 சதவீதமாக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இதற்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 5,358,400 ஆகும். | ''e'' செய்திப் பத்திரிகை ஒரு தடவை தரவிறக்கம் செய்யப்பட்டதன் பின்னர் அந்தக் கணனி, கையடக்கத் தொலைபேசி, டெப் கணனியினை பரிசீலனை செய்கின்ற எந்தவொரு எண்ணிக்கையிலும் வாசிப்பதற்கு முடியுமாக இருந்தது. அதன் பிரகாரம் தரவிறக்கம் செய்யப்பட்ட எண்ணிக்கையில் வாசிப்பவர்களின் எண்ணிக்கையை தீர்மானிக்க முடியாது. மேலும் ''e'' செய்திப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருட காலம் கடந்திருந்ததுடன் அது இன்னும் ஆரம்ப மட்டத்தில் காணப்படுகின்றமையால் வாசிப்பாளர்களை விருத்தி செய்துகொள்வதற்கு அதற்கு போதியளவான காலம் இல்லாதிருந்தது. | அடிப்படை நோக்கம் மற்றும் இலக்குகளை மிகவும் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் மக்களுக்கிடையே சென்றடைவதற்கு பொருத்தமான வேலைத்திட்ட மொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3.3 எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சமுர்த்தி நலன்பெறும் குடும்பங்களில் 2 இலட்சம் பேரை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய திட்டத்தை தயாரித்தல் மற்றும் 1,777,086 சமுர்த்தி நலனாளிகள் தொகுதிகளாக்குதல் ஆய்விற்காக ரூபா 10.83 மில்லியன் நிதியேற்பாடுகளில் 714,900 குடும்பங்களின் ஆய்விற்காக தேவையான குடும்பங்களை தொகுதியாக்குவதற்கு தேவையான விண்ணப்ப படிவங்களை | இந்த நிதியேற்பாடுகளில் செலவிடப்பட்டவை உரிய குடும்பங்களை தொகுதிகளாக்குவதற்கு தேவையான குடும்ப ஆய்விற்காக தேவையான விண்ணப்பபடிவங்களை அச்சிடுவதற்காகவே ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒவ்வொரு மாவட்டத்தினாலும் முதலாவதாக உரிய விண்ணப்ப படிவங்களை அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை சரியான பிரகாரம் அமுல்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அச்சிடுவதற்காக ரூபா 10.03 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பௌதீக செயல்முன்னேற்றம் 40 சதவீதமும் நிதிசார் செயல் முன்னேற்றம் 93 சதவீதமும் ஆக காணப்பட்டது. | அதன் பிரகாரம் நிதிசார் செயல்முன்னேற்றம் 93 சதவீதமாக இருந்தது. | |
| (ஆ) | வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 6.23 மில்லியன் வழங்கப்பட்டிருந்த போதிலும் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் நிதிசார் செயல் முன்னேற்றம் ரூபா 4.81 மில்லியன் அதாவது 77 சதவீதம் ஆகும். இந்தத் தொகையில் 91 சதவீதம் உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் நடாத்துவதற்கு செலவிடப்பட்டிருந்ததுடன் பொலன்னறுவை மற்றும் மன்னார் மாவட்டங்களில் மாத்திரம் 9 பல்வேறு செயற்திட்டங்களுக்காக ரூபா 414,883 செலவிடப்பட்டு உரிய பயிற்சியளித்தல் வழங்கப்பட்டிருந்தது. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் சகல மாவட்டங்களினாலும் அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களுக்குரிய தொழில்நுட்ப பயிற்சி செயலமர்விற்காகவும் நிதியேற்பாட்டை பெற்றுக் கொள்ளும் இயலுமை தொடர்பாக ஆலோசனை வழங்கப்பட்டிருந்தமையால் பொலன்னறுவை மற்றும் மன்னார் என்ற இரண்டு மாவட்டங்களிலும் இது தொடர்பாக நிதியேற்பாடு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை சரியான பிரகாரம் அமுல்படுத்துதல் வேண்டும். |
| (இ) | பலாங்கொடை பயிற்சி நிலையத்தில் உத்தேசிக்கப்பட்ட பசளை தளத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 530,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதும், திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அது ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | தளத்தை நிர்மாணிப்பதற்காக தேவையான மரங்கள், பயிற்சி நிலைய வளவில் இருந்து வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் நிலைய வளவில் உள்ள மரத்தை வெட்டி ஏனைய பணிகளுக்காக ஈடுபடுத்துதல் சட்டரீதியற்றதாக காண்பிக்கப்பட்டு அதற்குரிய அங்கீகாரம் பலாங்கொடை பிரதேச செயலாளரினால் வழங்கப்படாதிருந்ததுடன் மரங்களை வழங்குதல் தொடர்பான பிரச்சினைகளின் | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை உரிய பிரகாரம் அமுல்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அடிப்படையில் இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | |
| (ஈ) சமுர்த்தி குடும்பங்கள் 2 இலட்சம் பேரை வலுவூட்டம் நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமமான நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக மக்களுக்கு தெளிவூட்டுவதற்காக 1736 அலுவலக பெனர்களை காட்சிப்படுத்துவதற்காக விசேட வாழ்வாதார செயற்திட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 3,364,505 செலவிடப்பட்டிருந்தது. | நிகழ்ச்சித்திட்டத்தின் இணையான நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக வங்கி மற்றும் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் பெனர் காட்சிப்படுத்தி மக்களுக்கு தெளிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை உரிய பிரகாரம் அமுல்படுத்துதல் வேண்டும். |

**3.4 எதிர்பார்த்த பிரதிபலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சமூக அடிப்படையிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 331 பிரதேச செயலகங்களில் சமுர்த்தி சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் மற்றும் 30,842 சமுர்த்தி பிரதேச அமைப்புக்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான ரூபா 19,000,000 நிதியேற்பாட்டுத் தொகையில் சமுர்த்தி சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் மற்றும் சமுர்த்தி பிரதேச அமைப்புக்கள் 2,742 இற்கு அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 13,710,000 செலவிடப்பட்டிருந்தது. | சமுர்த்தி சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் மற்றும் பிரதேச அமைப்புக்களுக்காக அலுவலக உபகரணங்களை வழங்குவதற்கான நிதியேற்பாட்டை வழங்கும் போதும், நிதி அனுப்பும் போதும் சில மாவட்டங்களில் கொவிட் தொற்றுநோயின் காரணமாக பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் நிர்வாக பிரச்சினைகளின் அடிப்படையில் நிதி அனுப்புவதற்கோ அல்லது நிதியேற்பாட்டை வழங்குவதற்கான முறைமையோ காணப்படாததன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டிருந்ததை குறிப்பிடுகின்றோம். | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை உரிய பிரகாரம் அமுல்படுத்துதல் வேண்டும். |

## 3.5 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 2/2020 இன் 3 மற்றும் 4 ஆம் பந்திகளில் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் மற்றும் 2021 திசெம்பர் 23 ஆந் திகதிய 7/2020 ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறின்றி இயற்கை உணவகங்கள் நிர்மாணம், பழுதுபார்த்தல், உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் பெனர் பதாகைகளை அமைத்தல் போன்றவற்றிற்காக 2021 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 10,642,564 தொகை செலவிடப்பட்டிருந்தது. | அந்தந்த மாவட்டங்களின் மூலம் பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி அந்த அங்கீகரிக்கப்பட்ட பணிகளுக்காக செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | அரச நிதி திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டியின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) | பெறுகை திட்டம் தயாரிக்கும் போது அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(இ) மற்றும் 4.2.2(அ) இன் பிரகாரம் பெறுகை செயற்பாடுகள் விரிவாகவும் மற்றும் பெறுகை கால அட்டவணையில் உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் ரூபா 7,371,546 பெறுமதியான அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல் பெறுகைகள் திட்டத்திலும், செயல்நடவடிக்கைத் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த ஆண்டில் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்யும் வகையில் 2102 செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டு அளவு போதியளவாக இல்லாமையால் அவசரம் மற்றும் அத்தியவசிய பணிகளுக்காக அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு செலவினத் தலைப்பு இலக்கம் 2509 இன் நிதியேற்பாட்டை பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த | அரச நிதித் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டியின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | துடன் பின்னர் அந்த வழுக்களை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என குறிப்பிடுகின்றோம். | |

**3.6 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்கத்தின் பணம், வருமானம், முத்திரை மற்றும் பொருட்கள் போன்றவைகளை கையேற்றல் அல்லது பொறுப்பாக இருத்தல் அல்லது நிர்வாக ரீதியாக பொறுப்பு வாய்ந்த மற்றும் அரசாங்கத்தின் கணக்கிற்கு உரிய பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் பிணை கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைத்திருக்கவில்லை. | அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சமுர்த்தி திணைக்களத்தின் வாகனப் பதிவேட்டில் 14 மோட்டார் சைக்கிள்கள் காணப்படுவதுடன் அந்த மோட்டார் சைக்கிள்கள் திணைக்களத்தின் சொத்தாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய விடயங்களை ஏற்றுக்கொள்வதுடன் இந்த 14 மோட்டார் சைக்கிள்களும் திணைக்களத்தின் பெயரில் கையேற்பதற்குரிய மாதிரி படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு இந்த மோட்டார் சைக்கிள்களின் முதல் உரித்து கையளிக்கப்பட்டுள்ள நிறுவனம் தற்போது கலைக்கப்பட்டுள்ள மையால் அந்த விண்ணப்பங்களை கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) சமுர்த்தி திணைக்களத்திற்கு சொந்தமான 146 வாகனங்களில் 33 வாகனங்கள் தொழில்நுட்ப கோளாறுகளுக்கு உட்பட்டு நீண்டகாலம் முதல் திணைக்களத்தின் வளவில் மற்றும் டென்சில் கொப்பேகடுவ மாவத்தை வாகனத் தரிப்பிடத்தில் பாதுகாப்பின்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அந்த 14 வாகனங்களையும் பழுதுபார்த்து ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு பொருத்தமான நிலையில் காணப்படுவதாக 2020 ஒக்தோபர் மாதம் மற்றும் 2021 யூலை மாதம் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினால் பரீட்சிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் அவதானிக்கப்பட்டது. இந்த வாகனங்களை பழுதுபார்ப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2022 ஏப்ரல் 24 ஆந் திகதி வரையிலும் முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த முறையில் பாதுகாப்பின்றி காணப்படுகின்ற இந்த வாகனங்களை விரைவாக பழுதுபார்க்காமல் பயன்படுத்த முடியாத நிலைக்கு உட்படுத்தியமை, பழுதுபார்த்தல் செலவினங்கள் அதிகரிக்கின்றமை, வாகனங்களின் உதிரிப்பாகங்கள் தொலைந்து போதல் ஏற்படக்கூடியதாக இருந்தமை என்பவற்றை தடுப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | தொழில்நுட்ப கோளாறுகளுக்கு உட்பட்டுள்ள வாகனங்கள் யாவும் ஒரே தடவையில் பழுதுபார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பது தொடர்பாகவோ தொழில்நுட்பக் குழுவினால் வழங்கப்படுகின்ற பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான நிதியேற்பாடு போதியளவில் இல்லாமையால் சில தாமதங்கள் ஏற்பட்டுள்ளதை குறிப்பிடுகின்றோம். தற்போது இவ்வாறான 04 வாகனங்களை பழுதுபார்ப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் நோக்கங்களை நிறைவேற்று வதற்காக சிக்கனமாகவும் செயற்திறனாகவும் நிதியினை ஈடுபடுத்துதல் வேண்டும். |

## 3.8 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட 03 கணக்காய்வு ஐயவினாக்கள் மற்றும் மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 03 ஐயவினாக்கள் என்பவற்றுக்கு பதிலளிக்கப்படாதிருந்ததுடன் தாமத காலம் 01 மாதம் முதல் 29 மாதங்கள் வரையான காலவீச்சினைக் கொண்டிருந்தது. அந்த ஐயவினாக்களுக்குரிய கணிப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 192,875,829 ஆகும். | கடந்த வருடத்தில் கணக்காய்வு ஐயவினாக்களுக்காக பதிலளிக்கும் போது தாமதம் ஏற்பட்டிருந்ததை ஏற்றுக்கொள்கின்றோம். தற்போது சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்காகவும் பதில் வரைவு செய்யப்பட்டுள்ளதுடன் விரைவாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிதிப் பிரமாணம் 452(1) இல் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு ஐயவினா பதிவேட்டை பரீட்சித்து சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கு உடனடியாக பதிலளிக்கப்படல் வேண்டும். |

## 3.9 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 மே 31 ஆந் திகதிய DSD/HO/6/EP/2/55/10 ஆம் இலக்க மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்ட பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் உணவகங்களை நிர்மாணிக்கும் போது உரிய காணியை திணைக்களத்திற்கு கையேற்பதற்கு முடியுமான காணியாக இருக்க வேண்டியதுடன் ஆகக்குறைந்தது 20 பேர்ச் காணியாக இருக்க வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 முதல் 2021 ஆம் ஆண்டு வரையான | உணவகங்கள் மற்றும் விற்பனை நிலையங்கள் அமைந்துள்ள காணிகளை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகளை வழங்குமாறு காண்பித்து 2022 ஏப்ரல் 30 ஆந் திகதிய DSD/HO/6/EP/6/SS/assign ஆம் இலக்க கடிதம் மூலம் சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | காணிகளின் சட்டரீதியான உரித்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| காலத்தில் 31 இயற்கை உணவகங்களை நிர்மாணிப்பதற்காக திணைக்களத்தினால் ரூபா 171,370,352 செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த காணிகளின் சட்ட ரீதியான உரித்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) 2016 முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தில் இயற்கை உணவகங்களை தாபித்தல், அபிவிருத்தி செய்தல், பழுதுபார்ப்பதற்காக திணைக்களத்தால் இதுவரை ரூபா 171,370,352 செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் எந்தவொரு வருமானத்தையும் பெற்றுக் கொள்வதற்கான உபாயவழிகள் ஈடுபடுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | உணவகங்கள் மற்றும் விற்பனை நிலையங்களிலிருந்து கிடைக்கின்ற வருமானம் பிரதேச அமைப்புக்களின் பெயரில் சமூக அடிப்படையிலான வங்கி சங்கங்களிலுள்ள கணக்கிற்கு செலவு வைப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சமுர்த்தி நலனாளிகளை வலுவூட்டும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காக திட்டங்கள் தயாரித்து உரிய பிரகாரம் அமுல்படுத்துதல் வேண்டும். |

## 3.10 இழப்பு நட்டம் தொடர்பான பரீட்சிப்பு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது ஏற்பட்ட 05 வாகன விபத்துக்களுக்குரிய, விபத்துக்கள் ஏற்பட்டு 2½ வருடங்கள் முதல் 5 வருடங்கள் வரையான காலம் கடந்ததன் பின்னர் நிதிப்பிரமாணம் 104(3), 104(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 06 வாகனங்கள் தொடர்பாக ஏற்பட்ட விபத்து தொடர்பான இழப்பு மற்றும் நட்ட பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை | 06 வாகனங்கள் தொடர்பாக இழப்பு நட்ட பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் | உரிய பிரகாரம் பதிவேடுகளில் உள்ளடக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | அதற்கான பரீட்சிப்பின் தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (இ) | நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் விபத்து ஏற்பட்டதன் பின்னர் ஆரம்ப அறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தின் 07 வாகனங்கள் தொடர்பாக அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படாதிருந்தமை மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. | கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட வாகன விபத்துக்கள் தொடர்பான விசாரணை அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு குழு நியமிக்கப்பட்டு மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2016 மே 05 ஆந் திகதி விபத்திற்குட்பட்ட வாகனம் தொடர்பாக 2016 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய நீதிமன்ற வழக்கு தீர்ப்பின் மூலம் சாரதி குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த வாகனத்தை பழுதுபார்ப்பதற்காக காப்புறுதி இழப்பீடாக கிடைத்த ரூபா 564,840 தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த இழப்பிற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து உரிய பணத்தை அறவிடுவதற்கு முகாமைத்துவத்தால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | வாகன விபத்திற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட நிதிப் பிரமாண பரீட்சிப்பின் படி நீதிமன்றத்தால் சாரதி குற்றவாளியாக்கப் பட்டிருந்தமையால் வாகனத்தை பழுதுபார்ப்பதற்காக செலவிடப்பட்ட காப்புறுதி இழப்பீட்டு பணமான ரூபா 564,840 தொகையை அறவிடுதல் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | இழப்பிற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019/41/04 ஆம் இலக்க தேசிய சபை தீர்மானத்தின் பிரகாரம் சமுர்த்தி சமூக அடிப்படையிலான அமைப்புக்கள், மற்றும் பிரதேச அமைப்புக்களுக்கு பணிப்பாளர் | 2017 இன் 02 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும சட்டத்தின் 45 | நிதியம் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் நியதிச்சட்டமாக்குவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| நாயகத்தால் சட்டத்தின் 4(3)(2) பிரிவின் பிரகாரம் சான்றிதழொன்று விநியோகிக்கும் போதும் மற்றும் வருடாந்த பழுதுபார்த்தலின் போதும் அறவிடப்படுகின்ற கட்டணம் சமுர்த்தி தேசிய சமூக அபிவிருத்தி நிதியத்தில் செலவு வைப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் புதிய சான்றிதழுக்காக ரூபா 500 தொகையும், புதுப்பிப்பதற்காக ரூபா 300 தொகையுமாக அறவிடப்பட்ட ரூபா 34,157,800 பணம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமூர்த்தி தேசிய சமூக அபிவிருத்தி நிதியத்தில் காணப்பட்டது. 1995 இன் 30 ஆம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம் மே 31 இல் உள்ளவாறு நடைபெற்ற சர்வதேச புகைப்பிடித்தல் எதிர்ப்பு தினத்திற்கு இணையாக அமுல்படுத்தப்பட்ட கொடி மற்றும் ஸ்டிக்கர் விற்பனையின் மூலம் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 46,822,495 தொகை இந்த நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்த சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றம் தொடர்பாக திறைசேரியிலிருந்து ஆலோசனை பெற்று அதன் செயற்பாடுகளை முறைமைப்படுத்தி நியதிச் சட்ட நிலைமையை ஏற்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் பணத்தை சேகரிப்பதற்கும், ரூபா 87,500,000 தொகையை நிலையான வைப்புக்களில் முதலிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | ஆவது பிரிவின் கீழ் சமுர்த்தி அதிகார சபையின் கீழ் பேணப்படுகின்ற நலனாளிகளின் சமூக அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு அமுல்படுத்தப்பட்ட ‘‘சமுர்த்தி தேசிய சமூக அபிவிருத்தி மன்றம்’’ நடாத்திச் செல்வதற்காக நியதிச் சட்ட அதிகாரம் கிடைத்திருந்தது. | எடுத்தல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை உரிய பிரகாரம் மீளாய்வு செய்யப்பட்டு | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பணிகளை உரிய பிரகாரம் நிறைவேற்றுவதற்கு |

| | | |
|---|---|---|
| குறைபாடுகள் மீண்டும் ஏற்படுவதை தடுக்கும் வகையில் தேவையான சரியான நடவடிக்கைகள் எடுக்காமையால் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பணிகள் உரிய பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | அனுப்பப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை தொடர்பாக மீளாய்வு செய்யப்படுவதுடன் அது தொடர்பாக தற்போது தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கைகளை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் பின்வருமாறு இருந்தது.

| வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட | 106 | 66 | 40 | - |
| மூன்றாம் | 2,501 | 2,388 | 259 | 146 |
| இரண்டாம் | 24,952 | 21,757 | 3,942 | 747 |
| ஆரம்ப | 516 | 434 | 90 | 8 |
| | 28,075 | 24,645 | 4,331 | 901 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அங்கீகரிக்கப்பட்ட 11 பணிப்பாளர் பதவிகள், அங்கீகரிக்கப்பட்ட 20 கணக்காளர் பதவிகள் மற்றும் 06 மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் பதவிகள் என்பன வெற்றிடமாக காணப்பட்டன. இந்த வெற்றிடப் பதவிகளுக்காக கடமைகளை நிறைவேற்றுதல், பதிற்கடமை மற்றும் கடமை மேவுகையாக நியமனங்களை மேற்கொள்வதற்கு | திணைக்களத்தின் நிறைவேற்று நிலையில் நாடளாவிய சேவைகளின் பதவிகளின் வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்கள் நியமித்து அனுப்புமாறு அரச நிர்வாக அமைச்சிற்கு பல சந்தர்ப்பங்களில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறே இரண்டாம், மூன்றாம், ஆரம்ப நிலைகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு திறைசேரி | செயற்பாடுகளை துரிதப்படுத்தி நிர்வாக பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தால் ஆரம்பம் முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் திணைக்களத்தில் இரண்டாம், மூன்றாம் மற்றும் ஆரம்ப நிலைகளில் 4,291 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்படாத 746 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் உள்ளபடியான பதவியணியினருக்கு உரியதாகும். | சுற்றறிக்கை மூலம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே மூன்று கட்டங்களின் கீழ் 2403 பட்டதாரிகளின் எண்ணிக்கையொன்றை நிரந்தரமாக்கி இந்த திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் இதுவரை அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | |
| (ஆ) | தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் பொலன்னறுவை மாட்டத்தில் சமுர்த்தி அலுவலகம், வங்கி மற்றும் வங்கிச் சங்கம், அலுவலகங்களில் இருக்க வேண்டிய சமுர்த்தி முகாமையாளர்களின் எண்ணிக்கை 54 ஆக இருந்த போதும், 2021 யூன் 30 இல் உள்ளவாறு உள்ளபடியான எண்ணிக்கை 27 ஆகும். 09 சமுர்த்தி முகாமையாளர்களால் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் நிரந்தர சேவை நிலையத்திற்கு மேலதிகமாக வெற்றிடமான இடங்களில் பதிற்கடமை மேற்கொண்டிருந்தனர். மேலும் 476 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 410 ஆகும். | எதிர்காலத்தில் ஆட்சேர்க்கும் போது இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திணைக்களத்தின் செயலாற்றலை அதிகரிக்கும் வகையில் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | திணைக்களத்தின் அதிகாரம் மற்றும் பணிகளை அமுல்படுத்துதல் மற்றும் நிறைவேற்றுவதற்காக பணிப்பாளர் நாயகம் ஒருவர் நிரந்தரமாக நியமிக்கப்பட வேண்டியிருந்ததுடன் இந்த பதவிக்காக திணைக்களம் தாபிக்கப்பட்டு 08 வருட காலத்தில் 11 பணிப்பாளர் நாயகங்கள் | திணைக்களம் தாபிக்கப்பட்டதன் பின்னர் விடயப் பொறுப்பு கௌரவ அமைச்சர் பல சந்தர்ப்பங்களின் போது மாற்றமடைந்ததன் காரணமாக பணிப்பாளர் நாயகம் பதவிக்காக அவ்வவ்போது 11 உத்தியோகத்தர்கள் அளவில் | திணைக்களத்தின் செயலாற்றலை அதிகரிக்கும் வகையில் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நியமனங்களில் அனேகமானவை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தமை திணைக்களத்தின் செயலாற்றலுக்கு மோசமாக தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | நியமிக்கப்பட்டிருந்தனர். | |
| (ஈ) | ஓயவூதிய உரித்தின்றிய சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் தொடர்ச்சியாக பங்களிப்பினைச் செலுத்தி திணைக்கள சேவைக்கு சேர்ந்து கொள்வதற்கு விருப்பம் தெரிவித்த 870 உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் பதவி உயர்வு நடைமுறையை அங்கீகரித்து உரிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நிர்வாக உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிகளுக்காக ஆட்சேர்த்தல் நடைமுறையை அங்கீகரித்துக் கொள்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஓய்வூதியம் இன்றி ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் விருப்பம் தெரிவித்த உத்தியோகத்தர் களுக்கான ஆட்சேர்த்தல் மற்றும் பதவி உயர்வு நடைமுறைகள் 12 இற்காக தேசிய சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பரிந்துரை பெறப்பட்டதன் பின்னர் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரமும் கிடைத்த பின்னர் அந்த உத்தியோகத்தர்களுக்கு நியமனக் கடிதங்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். அவ்வாறே நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகளுக்கான ஆட்சேர்த்தல் மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளை திருத்தி தற்போது அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் செயலாற்றலை அதிகரிக்கும் வகையில் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2018 பெப்ரவரி 20 ஆந் திகதிய 3/2018 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 03 II மற்றும் III இன் பிரகாரம் பதிலீட்டாளரை நியமிப்பதற்கு வசதியீனமாக இருந்த போதும் பதிற்கடமை | தற்போது உதவி பணிப்பாளர் (நிர்வாகம்) பதவிக்காக இலங்கை நிர்வாக சேவையின் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள மையால் நிர்வாக பிரிவின் நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்கு அதிக | திணைக்களத்தின் செயலாற்றலை அதிகரிக்கும் வகையில் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போன்ற மாற்று வழிகள் மூலம் தற்போது சேவையில் இருக்கின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்த போதிலும் அத்தியவசிய பதவிகளுக்கு மாத்திரம் உரிய அமைச்சின் செயலாளரின் தனிப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் 12 மாதங்கள் ஆகக்கூடியதன் கீழ் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்ய முடியுமாக இருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் பதிலீட்டாளரை நியமிப்பதற்கு வசதியீனமான பதவியொன்று அல்லாத பணிப்பாளர் நிர்வாகம் பதவிக்கு ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு 20 மாதங்கள் கடந்திருந்தது. அந்த கால எல்லையின் போது பொருத்தமான பதிலீட்டாளருக்கு பயிற்சியளிக்கும் பணிகள், மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற ஓய்வூதிய உத்தியோகத்தரின் பொறுப்பாக இருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் சுற்றறிக்கையின் பிரகாரம் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரச்சினையான நிலைமை இல்லாதிருந்ததையும் குறிப்பிடுகின்றோம். | |
| (ஊ) | 2019 யூலை 05 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் திவிநெகும சட்டத்தின் 25(3) பிரிவின் பிரகாரம் சமூக அடிப்படையிலான வங்கி பதவியணியினர்களுக்காக ஓய்வூதியத்துடன் அரசாங்க ஊழியர்களை நிரந்தர அடிப்படையில் நியமித்தல் சட்டத்திற்கு முரணானதாக கௌரவ சட்டமா அதிபரால் அறிவிக்கப்பட்டிருந்தமை, சமூக அடிப்படையிலான வங்கி சங்கங்களில் தற்போதும் சேவையில் | தற்போது சமூக அடிப்படையிலான வங்கிகள் மற்றும் வங்கி சங்கங்களில் சேவையாற்றுகின்ற ஓய்வூதியத்துடனான உத்தியோகத்தர்கள் நிரந்தர அடிப்படையில் நியமித்தல் சட்டத்திற்கு முரணாக இருந்தமை கௌரவ சட்டமா அதிபரால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வங்கி பதவியணியினருக்கு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக 2020 ஒக்தோபர் மாதம் | திணைக்களத்தின் செயலாற்றலை அதிகரிக்கும் வகையில் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஈடுபட்டிருக்கின்ற திவிநெகும சட்டத்தின் 44(உ)i மற்றும் ii இன் கீழ் திணைக்களத்தில் சேவைக்கு சேர்ந்த உத்தியோகத்தர்கள் தற்காலிக அடிப்படையில் அந்த நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டதாக கவனத்தில் கொள்ள வேண்டியிருந்ததுடன் எதிர்காலத்தில் வங்கி பதவியணியினருக்காக பிரத்தியேக பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கும், அதன் பின்னர் வெற்றிடமான பதவிகளுக்காக அதன் பிரகாரம் ஆட்சேர்ப்புக்களை சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் 2021 திசெம்பர் 31 வரை அது தொடர்பாக நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் 2021 சனவரி முதல் 2021 திசெம்பர் 31 வரை வங்கிகளில் இருக்கின்ற 6,444 எண்ணிக்கையிலான சமுர்த்தி பதவியணியினருக்காக திணைக்களத்தால் மொத்தமாக ரூபா 3,944,366,634 சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் இதுவரையிலும் அதற்கான அங்கீகாரம் வழங்கப்படாமையினால் இந்த உத்தியோகத்தர்கள் தற்காலிகமாக விடுவித்தலில் தாமதம் ஏற்பட்டிருந்ததை குறிப்பிடுகின்றோம். | |
| (எ) | 2017 இன் 02 ஆம் இலக்க திவிநெகும (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2013 இன் 1 ஆம் இலக்க திவிநெகும சட்டத்தின் 4(உ)iii மற்றும் iv பிரிவின் கீழ் உள்ளீர்ப்புச் செய்வதற்கு விருப்பம் தெரிவித்த உத்தியோகத்தர்களின் விருப்பத்தை மாற்றுவதற்கு 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய சமுர்த்தி சுற்றறிக்கை 2018/6 இன் மூலம் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்ததுடன் தமது விருப்பத்தை மீண்டும் | சட்டத்தின் 44 (உ) III ஆம் பிரிவின் கீழ் வருகின்ற உத்தியோகத்தர்களின் சம்பளம் தொடர்பாக கொள்கைரீதியான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவை பத்திரம் அனுப்பப்பட்டுள்ளது. அதற்காக கிடைக்கின்ற தீர்மானத்தின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் தமது விருப்பத்தை மாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற மையால் அவர்களுக்கு அந்த சந்தர்ப்பம் வழங்க | செயற்பாடுகளை விரைவுபடுத்தி நிர்வாக பிரச்சினைகளை தீர்த்தல் வேண்டும். |

சமர்ப்பித்து பழைய சேவைக் காலத்திற்காகவும் உரித்து வழங்கப்பட்டிருந்தது.

சுற்றறிக்கையின் II இன் கீழ் அதிகாரசபையில் சேவையாற்றிய காலத்திற்காக 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் தற்போது இந்த உத்தியோகததர்களில் ஒரு பகுதியினர் பணிக்கொடைப் பணத்தை பெற்றிருந்ததுடன் அந்த பணம் அரசாங்கத்திற்கு மீள செலுத்த வேண்டியதாக காண்பிக்கப்பட்ட போதிலும் இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

வேண்டியிருந்தது.

அவ்வாறே தற்போது ஓய்வுபெற்றுச் செல்லுகின்ற மற்றும் மரணமடைந்த உத்தியோகத்தர்கள் தமது ஓய்வூதிய சம்பளத்தை தயாரித்துக் கொள்வதற்காக அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய சகல பணத்தையும் செலுத்தி முடித்ததன் பின்னர் அந்த ஓய்வூதிய நலன்களை பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் மேலும் குறிப்பிடுகின்றோம்.